பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**29 05 2026** **FRIDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

# தலைப்புச் செய்திகள்

1. எல்லைப்பகுதிகளில் சட்ட விரோத ஊடுருவல் போன்றவற்றால் மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றத்தை சட்ட ரீதியாக கட்டுப்படுத்து குறித்து மத்திய அரசு ஆராய்ந்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. இந்தியாவில் முதலீடு செய்ய முன்வருமாறு அமெரிக்க தொழில் நிறுவனங்களை மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. இந்திய எண்ணெய் கப்பல் **Nissos Keros** பாதுகாப்பாக **Hormuz** நீரிணையை கடந்துள்ளது.

4. தென்மேற்கு பருவமழை நடப்பாண்டில் இயல்பைவிட குறைவாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<<>>>>>>>

எல்லைப்பகுதிகளில் சட்ட விரோத ஊடுருவல்கள் உள்ளிட்டவற்றால் நாட்டின் மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றத்திற்கான காரணங்களை இதற்காக அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழு ஆராய்ந்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மக்கள் தொகையில் ஏற்படும் போலியான மாற்றத்தை சட்ட ரீதியாக கட்டுப்படுத்துவது குறித்தும் இக்குழு ஆய்வு செய்யும் என்றும் கூறினார்.

இதற்காக புதிய சட்டம் ஒன்றை கொண்டுவருவது குறித்தும் அரசுக்கு இந்த உயர்மட்டக்குழு பரிந்துரை செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்குவங்க மாநிலத்தில் ஆட்சியில் இருந்த செல்வி மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமுல் காங்கிரஸ் அரசு பங்களாதேஷிலிருந்து ஊடுருவல்களை தடுக்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.

ஆனால், தேர்தலுக்கு பிறகு அம்மாநிலத்தில் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு சுவேந்து அதிகாரி, ஊடுருவலை தடுப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

எல்லை பாதுகாப்புப் படைக்கு **600** ஹெக்டேர் நிலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதனையடுத்து, பங்களாதேஷ் நாட்டையொட்டி, மேலும் ஊடுருவல் ஏற்படாமல் தடுக்கும் வகையில் வேலி அமைக்கப்படும் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

ஐ நா அமைதிப்படை தினத்தையொட்டி, இதில் பணியாற்றும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் சேவையை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பாராட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று அமைதியையும், பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான தன்னலமற்ற முயற்சியை அவர்கள் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

உலகம் சவாலான சூழ்நிலைகளை சந்திக்கும் காலக்கட்டங்களில் மிகுந்த அர்ப்பணிப்போடு அமைதியை நிலைநாட்ட அவர்கள் மேற்கொள்ளும் முயற்சி பாராட்டுதலுக்குரியது என்று கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

மூலக்கூறு உற்பத்திக்கான தொழில் நுட்பம் தொடர்பாக ஒடிஷா மாநில அரசுக்கும், **Intel** மற்றும் **3DGS** நிறுவனங்களுக்கு மத்திய

தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், **Substrate** எனப்படும் இந்த மூலக்கூறு தொழில்நுட்பம் செமி கண்டெக்டர் தொழில்துறையில் நவீன கட்டமைப்பை உருவாக்க பயன்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>

இந்தியாவில் முதலீடு செய்ய முன்வருமாறு அமெரிக்க தொழில் நிறுவனங்களை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கேட்டுக்கொண்டுள்ளார்.

நியூயார்க்கில் **50**-க்கும் மேற்பட்ட தொழில் அதிபர்களை தாம் சந்தித்து பேசியதாக கூறியுள்ள திரு கோயல், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, வர்த்தகத்துக்கு உகந்த சூழல் மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகள், முதலீட்டுக்கான வாய்ப்புகள் ஆகியவை குறித்து தாம் எடுத்துரைத்ததாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, தொழில் முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கி தந்திருப்பதாக தாம் அமெரிக்க தொழில் அதிபர்களிடம் எடுத்துக்கூறியதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>

இந்தியா — கனடா இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை இவ்வாண்டுக்குள் இறுதி செய்ய இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளன.

மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், கனடாவின் வர்த்தக அமைச்சர் **Maninder Sidhu** ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள வர்த்தக முதலீடு தொடர்பான கூட்டறிக்கையில் இதனை தெரிவித்துள்ளனர்.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் பயனளிக்கும் வகையில் அமையும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

வர்த்தகம் மற்றும் முதலீடுகளை இருதரப்பிலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் இருதரப்பிலும் உறுதி செய்யப்படுவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பது, வர்த்தகத்துக்கான வாய்ப்புகளை அதிகரிப்பது உள்ளிட்டவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>

முன்னாள் பிரதமர் பாரத ரத்னா சௌத்ரி சரண் சிங் நினைவு நாளையொட்டி, மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு சிவ்ராஜ் சிங் சௌகான் ஆகியோர் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், விவசாயிகளின் நலன்களை பாதுகாக்க சரண் சிங் எடுத்த நடவடிக்கைகள் மக்களிடையே பெறும் வரவேற்பை பெற்றுள்ளதாக கூறியுள்ளார்.

வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் சரண் சிங் என்று கூறியுள்ளார்.

விவசாயிகளுக்காக அவர் ஆற்றிய அரும் பணிகளையும் இந்நாளில் நினைவுகூர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகளின் வளர்ச்சிக்கும், கிராமப்புற மேம்பாட்டுக்கும் அயராது பணியாற்றியவர் சரண் சிங் என்றும் வேளாண் அமைச்சர் கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

மலேசியா — தமிழகம் இடையிலான கலாச்சார உறவை வலுப்படுத்தும் வகையில், மலேசியாவிலிருந்து 46 பேர் கொண்ட கலைக்குழு இன்று சென்னை வந்தடைந்தது.

தில்லை தஞ்சை நாட்டிய யாத்திரை நிகழ்ச்சிக்காக வந்துள்ள இந்த கலைக்குழுவினர், இம்மாதம் **31**-ஆம் தேதி தஞ்சாவூரிலும், ஜூன் ஒன்றாம் தேதி சிதம்பரத்திலும் நாட்டிய நிகழ்ச்சிகளை வழங்க உள்ளனர்.

பரத நாட்டியம் மற்றும் இந்திய பாரம்பரிய கலைகள், மலேசிய கலைஞர்கள் மூலம் நடத்தப்படுவது பெரும் எதிர்பார்ப்பை பெற்றுள்ளது.

<<<<<<<<<>>>>>>>>

இந்திய எண்ணெய் கப்பல் **Nissos Keros** பாதுகாப்பாக **Hormuz** நீரிணையை கடந்துள்ளது.

இந்த கப்பல் ஜூன் மூன்றாம் தேதி விசாகப்பட்டினம் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஷார்ஜாவிலிருந்து இம்மாதம் **21**-ஆம் தேதி புறப்பட்ட எண்ணெய் கப்பல், அரபிக் கடலில் இந்தியாவின் மேற்கு கடற்பகுதிக்கு வந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக ஈரான் நாட்டின் செய்தி முகமை வெளியிட்டுள்ள தகவலில், இஸ்லாமிய புரட்சிப்படையின் கடற்படை பிரிவினர் கடந்த **24** மணிநேரத்தில் **23** வர்த்தக கப்பல்கள் **Hormuz** நீரிணையை பாதுகாப்பாக கடக்க உதவியதாக தெரிவித்துள்ளது.

ஈரானில் போர் சூழல் காரணமாக, நெருக்கடி ஏற்பட்டுள்ள போதிலும், கடற்படையினர் வெற்றிகரமாக கப்பல்கள் கடந்து செல்வதற்கு உதவிபுரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>

பயரங்கரவாத செயல்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச பாதுகாப்பு மன்ற கூட்டத்தில் பேசிய அவர், பயங்கரவாதத்திற்கு எதிரான இரட்டை நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார்.

சர்வதேச பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் பாதுகாப்பு சார்ந்த கட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

ஹோர்முஸ் மற்றும் செங்கடல் உட்பட சர்வதேச நீர்வழிப் பாதைகளில் தடையற்ற மற்றும் பாதுகாப்பான வர்த்தக் போக்குவரத்துகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்று திரு. அஜித் தோவல் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

ஆப்பிரிக்க குடியரசு நாடான காங்கோவில் பரவியுள்ள எபோலோ வைரஸ் தொற்று அந்நாட்டிற்கு சிக்கலான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்நாட்டில் நிலவும் சூழ்நிலை குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் **Tedros Adanhnom,** பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் செய்துதரப்படுவதாக கூறினார்.

**Buniya-**விலும் சுகாதார குழுக்கள் அனுப்ப ப ப் பட்டு, நிவாரணப் பணிகள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் என்று முதல்கட்ட தகவல்கள் தெரிவிப்பதாகவும், இதுவரை இந்நோயின் தாக்குதலுக்கு **238** பேர் உயிரிழந்திருப்பதாகவும் திரு **Tedros Adanhnom** கூறினார்.

<<<<<<<<<>>>>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் ஹமீர்பூர் மாவட்டத்தில் நேற்றிரவு பாலம் கட்டுமானப்பணியின்போது ஏற்பட்ட விபத்தில் ஆறு தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

பெட்வா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வந்த இந்த பாலம், இன்று அதிகாலை இரண்டு மணியளவில் இடிந்து விழுந்தது.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் தொழிலாளர்களை இடிபாடுகளிலிருந்து மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஹமீர்பூர் மாவட்ட ஆட்சியர் திரு அபிஷேக் கோயல், சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

மீட்கப்பட்ட நான்கு தொழிலாளர்களுக்கு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

<<<<<<<<<>>>>>>>>

தென்மேற்கு பருவமழை நடப்பாண்டில் இயல்பைவிட குறைவாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இத்தகவலை தெரிவித்த மத்திய புவி அறிவியல் துறை செயலர் டாக்டர் ரவிச்சந்திரன், வரும் ஜூன் முதல், செப்டம்பர் வரையிலான காலத்தில் சராசரியாக 90 சதவீதம் வரை மட்டுமே மழை பெய்யக்கூடும் என்றும், நான்கு சதவீதம் கூடுதலாகவோ, அல்லது குறைவாகவோ இருக்கும் என்றும் தெரிவித்தார்.

நாட்டின் வடகிழக்குப்பகுதியில், இயல்பான மழையளவு இருக்கும் என்றும், மத்திய தெற்கு தீபகற்ப மற்றும் வடமேற்கு பகுதியில் மழை அளவு இயல்பைவிட குறைவாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

எல்-நினோ தாக்கத்தால் பருவமழையில் பாதிப்பு ஏற்படும் என்றும் டாக்டர் ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய இந்திய வானிலை ஆய்வு மைய தலைமை இயக்குநர் டாக்டர் மிருத்தின் ஜெய் மொஹாபத்ரா, ஜூன் மாதத்தில் இயல்பைவிட குறைவான மழை இருக்கும் என்று தெரிவித்தார்.

தென்மேற்கு பருவமழை காலத்தில உத்தரப்பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், பீகார், ஒடிஷா, சத்தீஸ்கட், குஜராத் மாநிலங்களில் வெப்ப அலையின் தாக்கம் இருக்கும் என்றும் திரு மிருத்தின் ஜெய் மொஹாபத்ரா தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில், ராஜஸ்தான் அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

சண்டிகரில் இப்போட்டி இன்றிரவு 7.30 மணிக்குத் தொடங்குகிறது.

<<<<<<<<**END**>>>>>>>